## கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபை - 2011

### 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர, 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டின் அதன் நிதிசார் செயலாற்றல் மற்றும் காசுப் பாய்ச்சல் என்பவற்றினை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கமைய உண்மையாகவும் நியாயமாகவும் வெளிப்படுத்துகின்றதென்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.2.1 சபையின் தொடர்ந்தியங்கும் தன்மை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) முன்னைய 5 ஆண்டுகளிற்கான வருமான கணக்கிணக்கம், இழப்பீட்டுக் கொடுப்பனவு மற்றும் அவற்றின் மீது ஏற்பட்ட செலவினம் என்பன கீழே தரப்படுகின்றன. சபையின் தொடந்தியங்கும் தன்மையின் நிட்சயமின்மையை இது குறிக்கின்றது.

| ஆண்டு | பெறப்பட்ட தவணைப் பணம் | செலுத்தப்பட்ட கோரிக்கைகள் | செயற்பாட்டுச் செலவினம் | நிர்வாகச் செலவினம் | மொத்தச் செலவினம் | பெறப்பட்ட தவணைப் பணத்தை விஞ்சிய செலவினம் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா மில் | ரூபா மில் | ரூபா மில் | ரூபா மில் | ரூபா மில் | ரூபா மில் |
| 2007 | 37.5 | 21.3 | 1.5 | 27.5 | 50.3 | (12.8) |
| 2008 | 70.5 | 27.0 | 4.2 | 78.7 | 109.9 | (39.4) |
| 2009 | 83.4 | 31.0 | 5.7 | 84.1 | 120.8 | (37.4) |
| 2010 | 105.1 | 268.7 | 5.6 | 86.3 | 360.6 | (255.5) |
| 2011 | 157.4 | 57.3 | 10.1 | 82.3 | 149.7 | 7.7 |

(ஆ) மீளாய்வாண்டில் நெல், மற்றும் துணைப்பயிர் காப்புறுதி திட்டங்கள் தொடர்பில் பாரிய செலவினம் ஏற்பட்டிருந்ததுடன் இது சபையின் செயற்பாட்டு விளைவுகளை பாரியளவில் பாதித்திருந்ததென அவதானிக்கப்பட்டது. விபரங்கள் கீழே தரப்படுகின்றன.

| | காப்புறுதி திட்டங்கள் | வருமானம் | மொத்த செயற்பாட்டுச் செலவினம் | வருமானத்தின் சதவீதமாக செயற்பாட்டுச் செலவினம் |
|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | % |
| (i) | நெல் | 94,437,031 | 173,924,975 | 184.0 |
| (ii) | கால்நடை | 18,235,472 | 7,454,577 | 40.0 |
| (iii) | சுவசெத | 6,953,530 | 572,340 | 8.0 |
| (iv) | துணைப்பயிர் | 25,548,995 | 67,420,410 | 263.0 |
| (v) | விவசாய உபகரணங்கள் | 5,881,549 | 74,850 | 1.0 |

### 1.2.2 இலங்கை கணக்கீட்டு நியமங்கள்

ஒரு காசுப்பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்பட்டிருந்தது ஆனால் இது இலங்கை கணக்கீட்டு நியமம் 9 இல் குறிப்பிடப்பட்டவாறு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்தப்பட வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ரூபா 2,186,726 கூட்டுமொத்த தொகையான பின்வரும் ஊழியர்களின் கடன்கள் மற்றும் முற்பண மீதிகள் என்பன நீண்ட காலமாக அறவிடப்படாமல் கணக்குகளில் மீதியாக இருந்தன.

| | ரூபா |
|---|---|
| இடர் கடன்கள் | 1,385,858 |
| பண்டிகை முற்பணங்கள் | 51,300 |
| விசேட முற்பணங்கள் | 14,800 |
| எரிபொருள் முற்பணங்கள் | 160,601 |
| மோட்டார் சைக்கிள் கடன்கள் | 245,072 |
| விசேட பதவியினர் கடன்கள் | 4,800 |
| நானாவித முற்பணங்கள் | 324,293 |
| | 2,186,724 |

(ஆ) ரூபா 1,257,416 கூட்டு மொத்தத்தொகையான உத்தியோகத்தர் கடன் மீதிகள் நீண்ட காலமாக அறவிடப்படாதவையாக இருந்தன.

(இ) விவசாயிகள் ஓய்வூதிய கொடுப்பனவிற்காக விவசாயிகள் ஓய்வூதிய மற்றும் சமூக பாதுகாப்பு நலத்திட்டத்திற்கு ரூபா 149,044,122 ஆன தொகை வழங்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் இது 2012 யூலை 31 வரை மீள்நிதியிடப்பட்டிருக்கவில்லை.

**1.2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை**

கணக்காய்வில் பின்வரும் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| **தாபனவிதிக் கோவை** | |
|---|---|
| (i) அத்தியாயம் xxiv இன் 7(v) ஆம் பிரிவு | 10 ஊழியர்களிற்கு வழங்கப்பட்ட மோட்டார் வாகனக் கடன்களின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட மோட்டார் சைக்கிள்களின் உரிமையாண்மையை நிரூபிப்பதற்கான வாகனப் பதிவு விபரங்கள் அங்கீகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தரிற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) அத்தியாயம் xxiv இன் 3(i) ஆம் பிரிவு | 3 உத்தியோகத்தர்களால் பெறப்பட்ட ஒவ்வொன்றும் ரூபா 150,000 தொகையான மோட்டார் சைக்கிள் கடன்கள் குறித்த நோக்கங்களிற்காக பயன்படுத்தப் பட்டிருக்கவில்லை. |

**1.2.5 அங்கீகாரமற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2009 செப்தெம்பர் 01 ஆந்திகதிய 427 ஆம் இலக்க உள்ளக சுற்றறிக்கையின்படி விவசாய நடவடிக்கைகளில் ஈடுபடுகின்ற நபர்கள் மாத்திரமே நுழைவுரிமை பதிவு வேண்டும். விவசாய நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்காத நபர்களிற்கும் பதிவு செய்யப்பட்டிருந்ததென அவதானிக்கப்பட்டது.

(ஆ) 2009 ஏப்ரல் 24 ஆந்திகதிய 424 ஆம் இலக்க உள்ளக சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டவாறு இறந்த விலங்குளிற்கான கோரிக்கைகள் விலங்குகளின் பட்டி பெறாமல் செலுத்தப்பட்டிருந்ததை

கணக்காய்வுத் தெரிவுச் செவ்வை வெளிப்படுத்தியது. உதாரணங்கள் கீழே தரப்படுகின்றன.

| **பட்டி இல** | **பெறுமதி** |
|---|---|
| | **ரூபா** |
| ரீசீஜ/2010/12 | 26,800 |
| 21/33/139/3 | 44,800 |
| 503 | 17,800 |
| என்டி 589 | 44,800 |
| ரீசீஜ 505 | 22,800 |
| | 156,500 |

(இ) 2009 ஏப்ரல் 24 ஆந்திகதிய 424 ஆம் இலக்க உள்ளக சுற்றறிக்கையில் நெறிப்படுத்தப்பட்டவாறு மருத்துவச் சான்றிதழைப் பெறுவதற்கு முன்னர் விவசாயிகளுக்கு காப்புறுதி மேவுகையானது வழங்கப்பட்டிருந்த சந்தாப்பங்களை அவதானிக்கப்பட்டன. உதாரணங்கள் பின்வருமாறாகும்.

| காப்புறுதிக் காலம் | சான்றிதழ் திகதி |
|---|---|
| 2009-08-04-/03-08-2012 | 2009-08-20 |
| 2009-08-24/22-08-2012 | 2009-09-02 |
| 2010-04-27/26-04-2011 | 2010-05-06 |
| 2010-06-22/21-06-2011 | 2010-06-23 |

### 1.2.6 சர்ச்சைக்குரிய கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ரூபா 948,429 கூட்டுமொத்தத் தொகையான மதிப்பீட்டுத் திகதிகள் மாற்றப்பட்டிருந்த இழப்பீட்டுக் கொடுப்பனவுகள் செய்யப்பட்டிருந்தன.

(ஆ) நெல் காப்புறுதி தொடர்பில் தகவல்கள் பூர்த்தியாக்கப்படாத விண்ணப்பங்களில் ரூபா 10,271,559 கூட்டுமொத்தத் தொகையான இழப்பீட்டுக் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

(இ) மட்டக்களப்பு மாவட்டத்தில் 2010/2011 பெரும்போக காலத்தின் போது 49 விவசாயிகளிற்கு இரண்டு தடவைகளில் ரூபா 1,099,780

கூட்டுமொத்தத் தொகையான இழப்பீட்டுக் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. இந்தக் கொடுப்பனவுகளில் ரூபா 809,140 மாத்திரமே 2012 யூலை 31 வரை அறவிடப்பட்டிருந்தது.

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதி கூற்றுக்களின்படி, 2011 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் நிர்வாகச் செலவினங்களிற்கான அரசாங்க மானியத்தினை கணக்கிற்கு எடுக்க முன்னரான ரூபா 101,215,444 ஆன செயற்பாட்டு மிகைகளிற்கு எதிராக முன்னைய ஆண்டில் ரூபா 149,328,370 ஆன செயற்பாட்டு பற்றாக்குறை விளைந்திருந்தது. மீளாய்வாண்டின் போது பெறப்பட்ட ரூபா 68,998,243 ஆன அரசாங்க மானியம் மற்றும் ஏனைய வருமானம் என்பவற்றை சீராக்கிய பின்னர் ஒட்டு மொத்த மிகையான ரூபா. 87,675,318 இற்கு எதிராக முன்னைய ஆண்டிற்கான ரூபா 88,511,376 ஆன அரசாங்க மானியம் மற்றும் ஏனைய வருமானம் என்பவற்றினை சீராக்கிய பின்னர் ஒட்டு மொத்த நேராத்த பற்றாக்குறை ரூபா 147,406,522 ஆகும். ஆதலால் ஒட்டுமொத்த விளைவுகளில் ரூபா 235,081,840 ஆன முன்னேற்தைக் காட்டுகின்றது. மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்கான நிதிசார் விளைவுகளின் பொழிப்பு மின்வரும் அட்டவணையில் தரப்படுகின்றது.

| விடயம் | தற்போதைய ஆண்டு (2011) | முன்னைய ஆண்டு (2010) | முன்னைய ஆண்டை விஞ்சிய மாற்றங்களின் சதவீதம் |
|---|---|---|---|
| | ரூபா (000) | ரூபா (000) | % |
| காப்புறுதி தவணைப்பணம் | 157,417 | 105,062 | 50 |
| வட்டி | 11,268 | 19,923 | (43) |
| மொத்த செயற்பாட்டு வருமானம் | 168,685 | 124,985 | 35 |
| செற்பாட்டுச் செலவினம் | 67,470 | 274,313 | (75) |
| செயற்பாட்டு மிகை/ (பற்றாக்குறை) | 101,215 | (149,328) | 168 |
| நிர்வாகச் செலவினத்திற்கான அரசாங்க மானியம் | 62,750 | 85,500 | (27) |

| | | | |
|---|---|---|---|
| ஏனைய வருமானம் | 6,248 | 3,011 | 108 |
| நிர்வாகம், நிதி மற்றும் ஏனைய செலவினம் | (82,538) | (86,589) | (5) |
| தேறிய மிகை / (பற்றாக்குறை) | 87,675 | (147,406) | 159 |
| ஏ.ஏ.ஐ.பீ ஒதுக்க நித்தியத்திற்கான ஏற்பாடு | 5,060 | - | - |
| ஏற்பாட்டின் பின்னர் தேறிய மிகை / (பற்றாக்குறை) | 82,615 | (147,406) | 156 |

பின்வருவன மேற்குறித்த முன்னேற்றத்திற்காக பிரதான பங்காற்றியிருந்தது.

(i) நெற் காப்புறுதி அதிகரித்தமை காரணமாக முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது காப்புறுதித் தவணைப்பணம் 50% ஆக அதிகரித்திருந்தது.

(ii) பேரளிவு நிலைமை ஏற்பட்டிருக்காமை காரணமாக முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது செயற்பாட்டுச் செலவினம் 75 % ஆல் வீழ்ச்சியடைந்திருந்தது.

(iii) நிலையான சொத்துக்களின் கைதவிர்ப்புக் காரணமாக முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது ஏனைய வருமானம் 108 % ஆல் அதிகரித்திருந்தது.

## 2.2 பகுப்பாய்வு ரீதியான நிதிசார் மீளாய்வு

(அ) மீளாய்வாண்டு மற்றும் முன்னைய 4 ஆண்டுகளின் நிதிசார் விளைவுகளின்படி, அரசாங்க மானியத்திற்கு முன்னரான தேறிய மிகை படிப்படியாக வீழ்ச்சியடைந்திருந்தது. விபரங்கள் பின்வருமாறுள்ளன.

| | 2011 | 2010 | 2009 | 2008 | 2007 |
|---|---|---|---|---|---|
| | ரூபா மில் | ரூபா மில் | ரூபா மில் | ரூபா மில் | ரூபா மில் |
| மொத்த வருமானம் | 175 | 128 | 114 | 96 | 48 |
| மொத்தச் செலவினம் | 150 | 361 | 121 | 134 | 50 |
| தேறிய மிகை/ | 25 | (233) | (7) | (38) | (2) |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (பற்றாக்குறை) | | | | | |
| அரசாங்க மானியம் | 63 | 85 | 75 | 42 | 12 |
| | --------- | --------- | --------- | --------- | ---------- |
| அரசாங்க மானியத்தின் பின்னர் தேறிய மிகை/ (பற்றாக்குறை) | 88 | (148) | 68 | 4 | 10 |
| | --------- | --------- | --------- | --------- | ---------- |

சபையானது 2007 முதல் 2010 வரையான காலத்தின் போது அதன் செயற்பாடுகளிற்காக அரசாங்க மானியங்களில் தங்கியிருந்ததென அவதானிக்கப்பட்டது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

### காப்புறுதித் திட்டங்களின் நிர்வாகம்

கிடைக்கப்பெற்ற தகவலின்படி, மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்கான காப்புறுதித் திட்டங்களின் பௌதீக மற்றும் நிதிசார் செயலாற்றலை பின்வரும் கூற்று காட்டுகிறது.

| விடயம் | அளவீடு | இலக்கு | | | | எய்தல் | | | | சதவீதமாக எய்தல் (%) | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | பௌதீக | | நிதிசார் | | பௌதீக | | நிதிசார் | | பௌதீக | | நிதிசார் | |
| | | 2010 | 2011 | 2010 ரூபா (000) | 2011 ரூபா (000) | 2010 | 2011 | 2010 ரூபா (000) | 2011 ரூபா (000) | 2010 % | 2011 % | 2010 ரூபா (000) | 2011 ரூபா (000) |
| 1. பயிர் காப்புறுதி | | | | | | | | | | | | | |
| (அ) நெல் | ஏக்கர் | 60,000 | 90,519 | 48,000 | 71,371 | 65,572 | 101,741 | 53,010 | 94,437 | 109.2 | 112.40 | 110.44 | 132.32 |
| (ஆ) மிளகாய் | ஏக்கர் | 500 | 823 | 700 | 1,411 | 194 | 431 | 364 | 826 | 38.80 | 52.00 | 52.00 | 58.54 |
| (இ) பெரிய வெங்காயம் | ஏக்கர் | 600 | 341 | 1,920 | 3,386 | 1,021 | 998 | 2,719 | 2,744 | 170.1 | 292.67 | 141.61 | 81.04 |
| (ஈ) தென்னை | ஏக்கர் | 975 | 130 | 1,053 | 140 | 10 | 5 | 11 | 11 | 1.03 | 3.85 | 1.04 | 7.86 |
| உ) கரும்பு | | 1,300 | 1,040 | 3,055 | 2,570 | 63 | 30 | 377 | 28 | 4.85 | 2.88 | 12.34 | 1.09 |
| (ஊ) சோளம் | ஏக்கர் | 15,500 | 12,065 | 17,050 | 18,583 | 11,101 | 9,788 | 17,977 | 16,263 | 71.62 | 81.13 | 105.44 | 87.52 |
| (எ) ஏற்றுமதி மற்றும் பல்லாண்டுப் பயிர் | ஏக்கர் | 600 | 1,376 | 1,680 | 3,759 | 107 | 14 | 239 | 49 | 17.83 | 1.02 | 14.23 | 1.30 |
| (ஏ) மலர் தாவரம் | தாவரம் | - | 64,752 | 400 | 261 | - | - | 6 | - | - | - | 1.50 | - |
| (ஐ) பெருந்தாட்டப் பயிர் | ஏக்கர் | 416 | 222 | 832 | 444 | 16 | 756 | 42 | 709 | 3.85 | 340.54 | 5.05 | 159.68 |
| (ஒ) உருளைக் கிழங்கு | ஏக்கர் | 200 | 600 | 1,000 | 3,037 | 518 | 817 | 2,095 | 2,919 | 259.0 | 136.17 | 209.5 | 96.11 |
| (ஓ) ஏனைய பயிர் | ஏக்கர் | 900 | 5,236 | 450 | 3,751 | 2,756 | 1,076 | 1,985 | 1,130 | 306.2 | 20.55 | 441.11 | 30.11 |
| (ஔ) மரக்கறி | ஏக்கர் | 300 | 375 | 900 | 1,273 | 521 | 889 | 807 | 869 | 173.6 | 237.07 | 89.67 | 68.26 |
| 2. கால்நடை | | | | | | | | | | | | | |
| மாடு | எண் | 11,000 | 11,200 | 27,500 | 25,928 | 5,631 | 12,982 | 11,334 | 16,729 | 51.19 | 115.91 | 41.21 | 64.52 |
| ஆடு | எண் | 8,000 | 11,646 | 2,500 | 6,140 | 3,219 | 2,837 | 1,436 | 1,506 | 40.24 | 24.36 | 57.44 | 24.53 |
| 3. களஞ்சியங்கள் | எண் | 1,000 | 1,063 | 5,000 | 4,897 | 10 | 5 | 178 | 44 | 1.00 | 0.47 | 3.56 | 0.9 |
| 4. விவசாய உபகரணம் | எண் | 2,000 | 3,645 | 7,000 | 13,600 | 454 | 402 | 3,225 | 5,881 | 22.70 | 11.03 | 46.07 | 43.24 |
| 5. சுவசெத | எண் | 40,000 | 36,085 | 16,000 | 15,478 | 20,618 | 13,181 | 8,456 | 6,953 | 51.54 | 36.53 | 52.85 | 44.92 |
| 6. ஆயுள் காப்புறுதி | எண் | 15,000 | 12,069 | 45,000 | 10,189 | - | 8,105 | - | 7,272 | 0 | 67.16 | 0 | 71.37 |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்காள்ளப்படுகின்றன.

(அ) மிளகாய், தென்னை, கரும்பு, ஏற்றுமதி மற்றும் பல்லாண்டுப் பயிர், பெருந்தோட்டப்பயிர், மாடுகள், களஞ்சியங்கள் மற்றும் விவசாய உபகரணங்கள் என்பன தொடர்பான காப்புறுதி நடவடிக்கைகள் சம்பந்தமான பௌதீக இலக்குகள் 50 சதவீதம் கூட எய்தப்பட்டிருக்கவில்லை. தென்னை, கரும்பு, ஏற்றுமதி மற்றும் பல்லாண்டுப் பயிர் மற்றும் களஞ்சியங்கள் காப்புறுதி என்பன 5 சதவீதத்திற்கு குறைவாக மாத்திரமே எய்தப்பட்டிருந்தது.

(ஆ) தென்னை, கரும்பு, ஏற்றுமதி மற்றும் பல்லாண்டுப் பயிர், மலர்த்த தாவரம், ஏனைய பயிர்கள், மாடுகள், களஞ்சியங்கள், விவசாய உபகரணங்கள் மற்றும் சுவசெத என்பன தொடர்பான காப்புறுதி நடவடிக்கைகள் சம்பந்தமான நிதிசார் இலக்குகள் 50 சதவீதம் கூட எய்தப்பட்டிருக்கவில்லை. தென்னை, கரும்பு, ஏற்றுமதி மற்றும் பல்லாண்டுப்பயிர், மலர்த் தாவரம் மற்றும் களஞ்சியங்கள் காப்புறுதி என்பன 10 சதவீதத்திற்கு குறைவாக மாத்திரமே எய்தப்பட்டிருந்தது.

(இ) பெரிய வெங்காயம், கரும்பு, சோளம், ஏற்றுமதி மற்றும் பல்லாண்டுப்பயிர், உருளைக்கிழங்கு, ஏனைய பயிர், மரக்கறி, ஆடுகள், களஞ்சியங்கள் விவசாய உபகரணம் மற்றும் சுவசெத் காப்புறுதி என்பன தொடர்பான இலக்குகளின் எய்துகை முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது வீழ்ச்சியடைந்திருந்தது.

(ஈ) மலர் தாவர காப்புறுதி தொடர்பில் பௌதீக மற்றும் நிதிசார் இலக்குகள் முறையே எண்ணிகை 64,752 மற்றும் ரூபா 0.261 மில்லியன் ஆக மதிப்பிடப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் போது எவ்வித ஒரு தாவரமும் காப்புறுதி செய்யப்பட்டிருக்கவில்லை.

### 3.2 சொத்துக்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கிடைக்கப்பெற்ற தகவல்களின்படி, 9 வாகனங்கள் நீண்ட காலமாகப் பயன்படுத்தப்படாமல் தலைமை அலுவலக வளவில் பயன்பாடின்றி விடப்பட்டிருந்தன.

(ஆ) முழுமையாக பெறுமானத் தேய்விடப்பட்ட ரூபா 382,111 பெறுமதியான பயன்படுத்தப்படாத அச்சிடல் பொருட்கள் மற்றும் ரூபா 451,509 பெறுமதியான உபகரணங்கள் என்பன 1982 இலிருந்து பயன்பாடின்றி இருந்தன.

## 3.3 செயற்திட்டத்திலுள்ள தாமதங்கள்

2008 ஆம் ஆண்டில் கட்டிடமொன்றை நிர்மாணிப்பதற்கான காணி திருத்தத்திற்காக ரூபா 585,800 ஆன தொகை மேற்கொள்ளபட்டிருந்ததுடன் 2011 ஆம் ஆண்டு நிதிக் கூற்றுக்களில் முற்பணமாகக் காட்டப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் காணியானது நீண்ட காலமாக பயன்பாடின்றி விடப்பட்டிருந்தது.

## 3.4 மனிதவள முகாமைத்துவம்

1. தரப்பட்ட தகவல்களின் படி, 2011 திசெம்பர் 31 இல் முடிவடைந்த மூன்று ஆண்டிற்கான அனுமதிக்கப்பட்ட ஆளணி, உண்மையான ஆளணி மற்றும் வெற்றிட நிலைமை என்பன கீழே தரப்படுகின்றன.

| பதவியினர் வகை | அனுமதிக்கப்பட்ட ஆளணி | | | உண்மையான ஆளணி | | | வெற்றிட நிலைமை | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 2011 திசெ 31 | 2010 திசெ 31 | 2009 திசெ 31 | 2011 திசெ 31 | 2010 திசெ 31 | 2009 திசெ 31 | 2011 திசெ 31 | 2010 திசெ 31 | 2009 திசெ 31 |
| நிறைவேற்றுனர்கள் | 56 | 45 | 45 | 38 | 39 | 41 | 18 | 06 | 04 |
| நிறைவேற்றுனர் அல்லாதோர் | 285 | 264 | 263 | 235 | 176 | 193 | 50 | 88 | 70 |
| சிற்றூழியர்கள் | 80 | 69 | 70 | 60 | 60 | 53 | 20 | 09 | 17 |
| அமைய | - | - | - | 07 | 68 | 144 | - | - | - |
| மொத்தம் | 421 | 378 | 378 | 340 | 343 | 431 | 88 | 103 | 91 |

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகிறது.

2009, 2010 மற்றும் 2011 ஆம் ஆண்டுகளில் இருந்த முறையே 91, 103 மற்றும் 88 ஆன வெற்றிடங்களிருந்ததுடன் அவற்றை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிக்கவிலை அவதானிக்கப்பட்டது

**3.5 பணிக்கொடைக்கான நிதியம்**

மீளாய்வாண்டு இறுதியிலுள்ளவாறான ரூபா 31,214,220 ஆன பணிக்கொடை ஏற்பாடுகளை மேவுவதற்கு பணிக்கொடை நிதியம் உருவாக்கப்பட்டிருக்கவில்லை.

**3.6. வாகனங்களின் பாவணை**

சபையால் பயன்படுத்தப்பட்ட ஒன்பது ஜீப் வண்டிகள் மற்றும் ஒரு கப் வாகனம் என்பன நீண்ட காலமாக சபைக்கு உரிமையை மாற்றப்பட்டிருக்கவில்லை. அந்த வானங்களில் சில வாகனங்கள் வருமான அனுமதிப் பத்திரங்கள் மற்றும் காப்புறுதி என்பன பெற்றுக் கொள்ளாமல் சபையால் பயன்படுத்தப்பட்டிருந்தன.

**4. கணக்களிதன்மையும் நல்ல ஆளுகைளும்**

**4.1 கூட்டுத்திட்டம்**

2009 - 2012 வரையான காலப்பகுதிக்கான கூட்டுத்திட்டம் தயாரிக்கப்பட்ட போதிலும் பொது முயற்சிகள் திணைக்களத்தால் வழங்கப்பட்ட 2003 யூன் 2 இன் பீஈடி/12 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 5.1.3 ஆம் பிரிவின்படி, அது 2011 ஆம் ஆண்டிற்காக நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை.

**4.2 வருடாந்த நடவடிக்கைத்திட்டம்**

மிளகாய், தென்னை, கரும்பு, சோளம், மலர் தாவரம், ஏனைய பயிர்கள், மரக்கறி, ஆடு, மாடு களஞ்கியங்கள், விவசாய உபகரணங்கள், சுவசெத மற்றும் ஆயுள் காப்புறுதி போன்ற காப்புறுதிகள் தொடர்பில் 2011 ஆம் ஆண்டிற்கான நடவடிக்கைத் திட்டத்தில் சொல்லப்பட்ட குறித்த சில இலக்குகள் அடையப்பட்டடிருக்காததுடன் இது சபையின் நல்ல ஆளுகைக்கான கருவியாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**4.3 உள்ளகக் கணக்காய்வு**

உள்ளகக் கணக்காய்வை நிறுவுதல் மற்றும் அதன் செயற்பாடுகள் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) உள்ளகக் கணக்காய்வு நியமங்கள் மற்றும் ஒழுக்கக் கோவை**

பொதுத் திறைசேரியின் முகாமைத்துவக் கணக்காய்வுத் திணைக்களத்தால் வழங்கப்பட்ட 2009 ஒக்தோபர் 07 ஆம் திகதிய டிஎம்ஏ/2009(3) ஆம் இலக்க சுற்றுநிருபத்தின்படி, உள்ளகக்

கணக்காய்வு சாசனம் மற்றும் உள்ளகக் கணக்காய்வு நிகழ்ச்சித்திட்டத்தை சபை திட்டமிட்டிருக்கவில்லை. உள்ளகக் கணக்காய்வு நிகழ்ச்சித் திட்டத்தைத் தயாரித்தபொழுது பின்வரும் உள்ளகக் கணக்காய்வு நியமங்கள் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

இணைப்பு - 2- செயலாற்றல் நியமங்கள் - இல. 2201 திட்டமிடல் கவனஈர்ப்பு

(ஆ) 2010 ஆம் ஆண்டிற்கான வருடாந்த உள்ளகக் கணக்காய்வு நிகழ்ச்சித்திட்டத்தில் பட்டியலிடப்பட்ட பின்வரும் பகுதிகள் மற்றும் நடவடிக்கைகள் மேற்காள்ளப்பட்டிருக்கவில்லை

(i) பொறுப்புக்கள்

(ii) சபையின் ஒட்டுமொத்த செயலாற்றல்

### 4.4 பாதீட்டுக் கட்டுப்பாடு

பாதீட்டிற்கும் உள்ளபடியானவற்றிற்கும் வருமானம் மற்றும் செலவினத்திற்கும் இடையில் குறிப்பிடத்தக்க அளவு வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டதால் பாதீடானது முகாமைத்துவ கட்டுப்பாட்டின் பயனுள்ள கருவியாக பயன்படுத்தப்பட்டிருக்க வில்லை என்பது சுட்டிக்காட்டப்பட்டது.

## 5. முறைமைகள் மற்றுடும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளில் மேற்கொள்ளப்பட்ட அவதானிப்புக்கள் காலத்திற்குக்காலம் சபையின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) காப்புறுதித் திட்டங்கள்
(ஆ) இழப்பீட்டுக் கொடுப்பனவுகள்
(இ) சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்குதல்
(ஈ) கூட்டுத் திட்டமும் செயல்நடவக்கைத் திட்டமும்
(உ) பாதீடு
(ஊ) பதவியினர் கடன்கள் மற்றும் முற்பணங்களின் தீர்ப்பனவு
(எ) உள்ளகக் கணக்காய்வு